ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 2.7 – திவளும்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

# 2.7 – திவளும்

‡ திவளும் வெண் மதி போல் திரு முகத்தரிவை ⋆
செழும் கடல் அமுதினில் பிறந்த அவளும் ⋆
நின் ஆகத்திருப்பதும் அறிந்தும் ⋆
ஆகிலும் ஆசை விடாளால் ⋆
குவளையம் கண்ணி கொல்லியம் பாவை ⋆
சொல்லு நின் தாள் நயந்திருந்த இவளை ⋆
உன் மனத்தால் என் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ‖ **2.7.1** ‖

துளம் படு முறுவல் தோழியர்க்கருளாள் ⋆
துணை முலை சாந்து கொண்டணியாள் ⋆
குளம் படு குவளைக் கண் இணை எழுதாள் ⋆
கோல நல் மலர் குழற்கணியாள் ⋆
வளம் படு முன்நீர் வையம் முன் அளந்த ⋆
மால் என்னும் மால் இன மொழியாள் ⋆
இளம் படி இவளுக்கென் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ‖ **2.7.2** ‖

சாந்தமும் பூணும் சந்தனக் குழம்பும் ⋆
தட முலைக்கணியிலும் தழலாம் ⋆
போந்த வெண் திங்கள் கதிர் சுடர் மெலியும் ⋆
பொரு கடல் புலம்பிலும் புலம்பும் ⋆
மாந்தளிர் மேனி வண்ணமும் பொன்னாம் ⋆

வளைகளும் இறை நில்லா ⋆
என்தன் ஏந்திழை இவளுக்கென் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ‖ **2.7.3** ‖

ஊழியின் பெரிதால் நாழிகை ! என்னும் ⋆
ஒண் சுடர் துயின்றதால் ! என்னும் ⋆
ஆழியும் புலம்பும் ! அன்றிலும் உறங்கா ⋆
தென்றலும் தீயினில் கொடிதாம் ⋆
தோழியோ ! என்னும் துணை முலை அரக்கும் ⋆
சொல்லுமின் என் செய்கேன் என்னும் ⋆
ஏழை என் பொன்னுக்கென் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ‖ **2.7.4** ‖

ஓதிலும் உன் பேர் அன்றி மற்றோதாள் ⋆
உருகும் நின் திருவுரு நினைந்து ⋆
காதன்மை பெரிது கையற உடையள் ⋆
கயல் நெடுங்கண் துயில் மறந்தாள் ⋆
பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது ⋆
தெள்ளியள் வள்ளி நுண் மருங்குல் ⋆
ஏதலர் முன்னா என் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ‖ **2.7.5** ‖

தன் குடிக்கேதும் தக்கவா நினையாள் ⋆
தடம் கடல் நுடங்கெயில் இலங்கை ⋆
வன் குடி மடங்க வாள் அமர் தொலைத்த ⋆
வார்த்தை கேட்டின்புறும் மயங்கும் ⋆
மின் கொடி மருங்குல் சுருங்க மேல் நெருங்கி ⋆
மென் முலை பொன் பயந்திருந்த ⋆

என் கொடி இவளுக்கென் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ॥ **2.7.6** ॥

உளம் கனிந்திருக்கும் உன்னையே பிதற்றும் ⋆
உனக்கன்றி எனக்கன்பொன்றிலளால் ⋆
வளங்கனி பொழில் சூழ் மாலிருஞ்சோலை ⋆
மாயனே ! என்று வாய் வெருவும் ⋆
களங்கனி முறுவல் காரிகை பெரிது ⋆
கவலையோடவலம் சேர்ந்திருந்த ⋆
இளங்கனி இவளுக்கென் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ॥ **2.7.7** ॥

‡ அலம் கெழு தடக்கை ஆயன் வாய் ஆம்பற்கு ⋆
அழியுமால் என் உள்ளம் ! என்னும் ⋆
புலம் கெழு பொரு நீர்ப் புட்குழி பாடும் ⋆
போதுமோ நீர் மலைக்கென்னும் ⋆
குலம் கெழு கொல்லி கோமள வல்லிக் ⋆
கொடி இடை நெடு மழைக் கண்ணி ⋆
இலங்கெழில் தோளிக்கென் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ॥ **2.7.8** ॥

பொன் குலாம் பயலை பூத்தன மென் தோள் ⋆
பொரு கயல் கண் துயில் மறந்தாள் ⋆
அன்பினால் உன்மேல் ஆதரம் பெரிது ⋆
இவ் வணங்கினுக்குற்ற நோய் அறியேன் ⋆
மின் குலா மருங்குல் சுருங்க மேல் நெருங்கி ⋆
வீங்கிய வன முலையாளுக்கு ⋆

என் கொலாம் குறிப்பில் என் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ‖ **2.7.9** ‖

‡ அன்னமும் மீனும் ஆமையும் அரியும் ஆய ⋆
எம் மாயனே ! அருளாய் ⋆
என்னும் இன் தொண்டர்க்கின் அருள் புரியும் ⋆
இடவெந்தை எந்தை பிரானை ⋆
மன்னு மா மாட மங்கையர் தலைவன் ⋆
மானவேல் கலியன் வாய் ஒலிகள் ⋆
பன்னிய பனுவல் பாடுவார் ⋆
நாளும் பழவினை பற்றறுப்பாரே ‖ **2.7.10** ‖

அடிவரவு — திவளும் துளம் சாந்தம் ஊழியில் ஓதிலும் தன் உளம் அலம் பொன் அன்னம் திரிபுரம்

திவளும் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்